அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016

## தமிழ்மொழி
## வளர்நிலை 3

பெயர்: ______________________________

நேரம்: 90 நிமிடங்கள்
மொத்தப்புள்ளிகள்: 100

## 1) மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக!

எ-கா: அனைவருக்கும் உண்மையாக நடப்பது நேர்மை.
(வீரம், நட்பு, நேர்மை)

1. மனிதன் எவ்வாறு வாழ வேண்டுமென ______________________ கூறுகின்றது.
(திருக்குறள், சிலப்பதிகாரம், தமிழ்வழி)

2. தமிழிலுள்ள உயிரெழுத்துகள் ______________________ ஆகும்.
(பதினெட்டு, பன்னிரண்டு, முப்பது)

3. கற்பதைப் ______________________ இன்றிக் கற்க வேண்டும்.
(பிளை, பிலை, பிழை)

4. நாடகங்களை இசையோடு பாடி, ஆடி நடித்தல் ______________________ எனப்படும்.
(ஆட்டம் ,கூத்து, குத்து)

5. மாலதி வயலின் ______________________.
(வாசிக்கின்றாள், மீட்டுகின்றாள், வரைகின்றாள்)

6. சிறுவயதிலேயே ______________________ பழக்கங்களைப் பழக வேண்டும்.
(தீய, நல்ல, கெட்ட)

7. சுற்றுலாச் செல்ல ஏற்ற காலம் ______________________.
(பனிகாலம், இலைஉதிர்காலம், கோடைகாலம்)

8. யாழினி ______________________ என்று சிரித்தாள்.
(குடுகுடு, கலகல, விறுவிறு)

9. தமிழர்களின் சிறந்த பண்புகளில் ஒன்று ______________________.
(விருந்தோம்பல், நன்றி மறத்தல், கேலி பேசுதல்)

10. புலி உறுமும். அதுபோல சிங்கம் ________________________ .
(கத்தும், பிளிறும், முழங்கும்)

11. பண்டாரவன்னியன் ________________________ எதிர்த்தான்.
(ஆங்கிலேயரை, போர்த்துக்கேயரை, இந்தியரை)

12. கூத்துப் பாடல்கள் ________________________ இருக்கும்.
(கசப்பாக, இனிமையாக, பிழையாக)

13. நேற்றுப் ________________________ மழையால் வெள்ளம் வந்தது.
(பெய்யும், பெய்த, பெய்கின்ற)

14. கதிரவன் ________________________த் திக்கில் எழுவான்.
(வடக்கு, தெற்கு, கிழக்கு)

15. செய்யும் செயல்களை ________________________ச் செய்ய வேண்டும்.
(பிழையாக, ஒழுங்காக, குழப்பமாக)

16. குழலி ________________________ப் பள்ளிக்குச் சென்றாள்.
(ஓடிஓடி, தாவித்தாவி, பாய்ந்துபாய்ந்து)

17. முகில்கள் ________________________த் தெரிந்தன.
(பச்சைப்பசேலென, கருமையாக, மகிழ்ச்சியாக)

18. 500 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________________.
(ஐநூறு, ஐம்நூறு, ஐந்நூறு)

19. பூ + சாடி இதைச் சேர்த்து எழுதினால் ________________________.
(பூம்சாடி, பூச்சாடி, பூசாடி)

20. நீ கீரை வாங்கினாய். நீங்கள் கீரை ________________________.
(வாங்குவீர்கள், வாங்குகின்றீர்கள், வாங்கினீர்கள்)

(20 புள்ளிகள்)

## 2) கீழே உள்ள சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக!

(சிரித்துப்பேசி, கொழுகொழு, ~~நெருங்கிய~~, வென்ற, தத்தித்தத்தி, பளபள)

எ-கா: செழியனும் மறவனும் நெருங்கிய நண்பர்கள்.

1. குழந்தை ______________________________ நடந்து வந்தது.
2. போட்டியில் ____________________________ வீரனை மக்கள் பாராட்டினர்.
3. பனிக்கரடிகள் ___________________________________ என இருக்கும்.
4. உறவினர்கள் ________________________________ மகிழ்ந்தனர்.
5. தங்கையின் பட்டுப்பாவாடை _________________________ என மின்னியது.

(10 புள்ளிகள்)

## 3) உறுப்பமைய எழுதுக!

1. விளையும் பயிரை முளையில் தெரியும்.

_____________________________________________________________________

2. தைப்பொங்கல் தமிழரின் திருநாள்.

_____________________________________________________________________

(5 புள்ளிகள்)

4) மாறியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுக!

எ-கா: வெள்ளைத் / பூம்பனி / துகள்களாக / விழுகின்றது
பூம்பனி வெள்ளைத் துகள்களாக விழுகின்றது.

1. எனது / இத்தாலியில் / பெரியப்பா / வாழ்கின்றார்

______________________________

2. சோமசுந்தரப்புலவர் / பாடல்களை / எழுதினார் / குழந்தைகளுக்கான

______________________________

3. தமிழை / கூறுவர் / எனச் / சிறப்பித்துக் / முத்தமிழ்

______________________________

4. தாலாட்டைக் / குழந்தை / உறங்கும் / கேட்டபடி

______________________________

5. நடந்து / குன்றன் / சென்றான் / காட்டுவழியே

______________________________

(10 புள்ளிகள்)

5) கீழேயுள்ள பந்தியைப் படித்துத் தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக!

என் அம்மாவின் பெயர் மலர்விழி. அவர் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். எல்லோரிடமும் ______________________ப் பேசுவார். எனக்கு ______________________ உணவுகளைச் சமைத்துத் தருவார். மாலையில் ______________________சொல்லித் தருவார். ஒவ்வொரு நாளும் இரவில் உறங்க முன் ______________________ சொல்லுவார். அம்மா இனிமையாகப் பாடுவார். நான் பாடலைக் கேட்டபடியே உறங்குவேன். ஓய்வு நாட்களில் என்னை வெளியில் அழைத்துச் ______________________. என் அம்மாவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| விருப்பமான | கதைகள் | ~~சிரித்த~~ | செல்வார் |
| பாடங்கள் | அன்பாக | | |

(10 புள்ளிகள்)

## 6) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக!

எ-கா: அம்மா குழந்தையை அன்போடு அணைத்தார்.
(குழந்தையை, குளந்தையை)

1. யானை மிக்க ______________________ உடையது.
(பளம், பலம்)

2. மாறன் ______________________ ஓவியம் அழகாக உள்ளது.
(வறைந்த, வரைந்த)

3. பாரி மன்னன் ______________________ நடந்து சென்றான்.
(அரண்மனைக்கு, அரன்மணைக்கு)

4. பெரியம்மா சுடச்சுடத் ______________________ தந்தார்.
(தேனீர், தேநீர்)

5. ______________________ உச்சியில் இருந்து நீர் விழுகின்றது.
(மழை, மலை)

(5 புள்ளிகள்)

## 7) கீழ்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, நிறைவு செய்க!

எ-கா: நேற்று மாணவரால் நாடகம் நடிக்கப்பட்டது.

1. கோவில் மணியொலி ______________________.

2. கலைகளைக் கற்க ______________________.

3. சிறுவர்கள் பனியில் சறுக்கி ______________________.

4. கன்றுக்குட்டி தாயிடம் ______________________.

5. திருக்குறள் உலகப் பொதுமறை என ______________________.

(10 புள்ளிகள்)

8) படத்தைப் பார்த்து, மிகச் சரியான சொல் அல்லது சொற்றொடருக்கு நேரே புள்ளடி இடுக!



எ-கா: சிறுவர்கள் இருப்பது

| | |
|---|---|
| வீட்டுக்குள் | ☐ |
| அறைக்குள் | ☐ |
| வீட்டுக்கு வெளியே | ☒ |

1. சிறுமி
   - சிரிக்கின்றாள் ☐
   - அழுகின்றாள் ☐
   - பேசுகின்றாள் ☐

2. அண்ணா தங்கையை
   - தடவுகின்றான் ☐
   - அடிக்கின்றான் ☐
   - குத்துகின்றான் ☐

3. கதவுக்கு வெளியே வருவது
   - நாய் ☐
   - பூனை ☐
   - முயல் ☐

4. மரத்தில் இருப்பது
   - பூக்கள் ☐
   - பழங்கள் ☐
   - பறவைகள் ☐

5. சிறுமியின் கையிலுள்ள பொருளின் வடிவம்
   - கோளம் ☐
   - முக்கோணம் ☐
   - சதுரம் ☐

(10 புள்ளிகள்)

## 9) கீழே காணும் பகுதியைப் படித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அன்புள்ள பாட்டிக்கு,

நாங்கள் நலமாக உள்ளோம். நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? உங்கள் அஞ்சல் கிடைத்தது. மகிழ்ச்சி. அப்பாவைப் பற்றிக் கவலைப்பட்டு எழுதியிருந்தீர்கள். அப்பாவுக்கு வலது கையில் முறிவு; அதனால் அஞ்சல் எழுத முடியவில்லை; இப்பொழுது சுகமாகி வருகின்றது. வலி நன்றாகக் குறைந்து விட்டதாகக் கூறுகின்றார். இரண்டு வாரங்களில் கைக்கட்டை அவிழ்த்து விடுவார்கள். அப்பாவுக்கு இப்பொழுது நல்ல ஓய்வு. தொலைக்காட்சி பார்ப்பது, நூல்கள் வாசிப்பது எனப் பொழுதைப் போக்குகின்றார். நாங்கள் அப்பாவைக் கவனமாகப் பார்த்துக் கொள்கின்றோம். கோடைகால விடுமுறைக்கு உங்களைப் பார்க்க வருவோம். எங்களுக்கு அப்பம் சுட்டுத் தர வேண்டும். மகிழ்ச்சிதானே.

நன்றி
உங்கள் அன்புப் பேர்த்தி
இசைநிலா

எ-கா யாருக்கு அஞ்சல் எழுதப்பட்டுள்ளது ?

பாட்டிக்கு

1. பாட்டிக்கு அஞ்சல் எழுதியது யார்?

______________________________

2. அப்பாவுக்கு ஏற்பட்ட துன்பம் யாது?

______________________________

3. அப்பாவின் பொழுது எப்படிப் போகின்றது?

______________________________

4. அப்பாவின் கைக்கட்டை எப்பொழுது அவிழ்ப்பார்கள்?

______________________________

5. இசைநிலாவுக்கு பிடித்த உணவு என்ன?

______________________________

(10 புள்ளிகள்)

10) படத்தைப் பார்த்து, ஐந்து வாக்கியங்கள் எழுதுக!



________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(10 புள்ளிகள்)